வழங்க வேண்டும். இந்த ஷரத்துக்களுக்கெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உகந்து, தீர்மானத்தை நிறைவேற்றுவார்களே யானால், பின்னர் நிதிநிலைக்கு ஏற்ப ஆராயப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 448, திரு. கே.பி. ராஜு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

448—

பேரூர் தொகுதி குளங்களில் தூர் எடுத்தல்

*20162—திரு. கே.பி. ராஜு:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதியில் குறிச்சி குளம், செங்குளம், பேரூர் குளம் ஆகிய குளங்களில் தூர் எடுத்து வாய்க்கால்களின் கரையைக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிச்சிக்குளத்திற்கு நீர்வரும் வரத்துக் கால்வாய், 1993-94ஆம் ஆண்டில் ரூ.36,194 செலவில் தூர் எடுக்கப்பட்டுள்ளது. செங்குளம், பேரூர்குளம் ஆகியவற்றிற்கு நீர்வரும் குனியமுத்தூர் கால்வாயில் தூர் எடுக்கும் பணி ரூ.90,500 செலவில் முடிவு பெற்றுள்ளது. கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. பணிகள் முடிந்த பின்னர், செங்குளம் மற்றும் பேரூர் குளங்களுக்கு நீர் நிறைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சிக்குளம், பேரூர்குளம், செங்குளம் போன்ற பகுதிகள் நொய்யல் ஆற்றினுடைய தண்ணீரால் நிரப்பப்படுகிற குளங்கள். இந்தக் குளங்கள் எல்லாம் கரிகால் சோழன் காலத்தில் கட்டப்பட்ட குளங்கள். சுமார் 60,000 ஏக்கர் நிலப்பரப்புக்கு இந்தக் குளங்கள் பாசன வசதி பெற்றுத் தருகின்றன. ஆகவே, கரையைப் பலப்படுத்தியிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், தண்ணீர் வந்து வந்து, எல்லாக் குளங்களிலும் தேங்கி நின்று, இறுதியாக தண்ணீர் வற்றிய

1995 ஏப்ரல் 26]

பிறகு, அந்தக் குளத்தில் தூர் எடுக்காமல், மண் நிறைந்துவிடுகிறது. ஆகவே, அடுத்து மழை பெய்கின்றபோது தண்ணீர் வரத்து வருகின்றபோது, குளங்களில் தண்ணீரினுடைய கொள்ளளவு குறைகிறது. ஆகவே அமைச்சரவர்கள் குளங்களை ஆழப்படுத்தும் அளவுக்கு தூர் எடுக்க......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கே.பி. ராஜு: குளங்களை ஆழப்படுத்தி, மண்ணை எடுத்தால், மழைக் காலங்களில் தண்ணீர் வரும்போது தண்ணீர் அளவு அதிகமாக இருக்கும். அதனால் நிலத்தடி நீர் உயரும். விவசாயிகளும் பயன்பெறுவார்கள். ஆகவே, குளத்தில் தூர் எடுக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-40*

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக குளங்களைத் தூர் எடுக்கின்ற போது, அதிகமான செலவினங்கள் ஏற்படுகின்ற காரணத்தாலேதான் அவற்றை எல்லாம் பலப்படுத்துவதற்காக ஒரு பெரிய, நீண்ட நெடிய திட்டத்தைத் தீட்டி நமது அரசு மத்திய அரசினுடைய ஒப்புதலோடு உலக வங்கிக்கு அனுப்புவதற்கான நடைமுறைகளை இன்றைக்குப் பின்பற்றிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, நம்மிடத்திலே ஒதுக்கப்படுகிற நிதி ஆதாரங்களை வைத்து, ஜே.வி.வி.டி. மூலம் ஒதுக்கப்படுகிற தொகையை வைத்து, பல்வேறு பொதுப்பணித் துறை சார்பில் உள்ள குளங்கள், ஜமீன் கண்மாய்கள் ஆகியவற்றை நாம் சீரமைத்துக் கொண்டிருக்கிறோம்.

அதுதவிர, இந்த ஆண்டு அதற்கென்று ஒரு சிறப்பு நிதியும் ஒதுக்கி குளங்களைத் தூர் எடுப்பதற்கான பணிகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, இதுபோன்று பெரிய குளங்களை எடுக்கிறபோது ஒரே நேரத்தில் அதிகமான அளவு தொகை செலவு செய்ய வேண்டிய நிலை இருக்கிற காரணத்தால்தான், நிதியாதாரங்களுடைய பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டுதான் இதுபோன்ற 'டெம்பரரி மெஷர்ஸ்' அதாவது தற்காலிகமாக அந்தப் பணிகளை நாம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, வெள்ளக் காலங்களில் உடைப்பு ஏற்படுகிறபோது கரையைப் பலப்படுத்துகிறோம். அதுதவிர, அந்தப் பகுதியில் இருக்கிற வரத்துக்

கால்வாய்களை எல்லாம் சீரமைக்கிறோம். இந்த அளவிலேதான் இந்தக் குளங்களுக்கு இப்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் முழுமையாக அந்தக் குளங்களைத் தூர் எடுப்பதற்கான மதிப்பீடுகளை ஆய்வு செய்து, நிதியாதாரத்திற்கு ஏற்ப அவை பரிசீலிக்கப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளங்களில் மண் அதிகமாக இருக்கிற காரணத்தால், அதை எடுப்பதற்கு அதிக மதிப்பீட்டுத் தொகை ஆகும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, தனியார்களுக்கு அதை விட்டுவிட்டால் அவர்கள் எடுத்து அதை விவசாயத்திற்கும் பயன்படுத்துவார்கள், விற்பதற்கும், வியாபாரத்திற்கும் பயன்படுத்துவார்கள். அப்படி ஏதாவது ஒரு திட்டம் அரசிடம் இருந்தால், தனியார்களிடம் கொடுத்து விட்டால், அவர்களே அந்தக் குளங்களைத் தூர் எடுத்து சுத்தமாக வைத்துக்கொள்ள உத்தரவாதம் அளித்தால், அரசு தனியார்களுக்கு கொடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, குளங்களைப் பொறுத்தவரையில் அரசினுடைய கட்டுப்பாட்டில் இருப்பவை. அவற்றை தனியாரிடத்தில் நாம் தாரை வார்க்க முடியாது. ஏனென்று சொன்னால் அதனுடைய நிர்வாகப் பொறுப்பு, பாசனப் பொறுப்பு எல்லாம் பல்வேறு விவசாயிகளுக்கு இருக்கிற காரணத்தால் தனியாரிடத்தில் குளங்களை கொடுப்போமானால் அவர்கள் தனிப்பட்ட ஆதிக்கம் செலுத்துவதற்கு வாய்ப்பு வந்துவிடும். ஆகவே, இதிலே அரசாங்கம் தலையிடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். பொதுவாக, சில குளங்களில் மண் எடுப்பதற்கு நாம் அனுமதிக்கிறோம். அதற்குரிய அனுமதி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமும், பொதுப்பணித்துறை அதிகாரிகள் மூலமும் அதற்குரிய சான்றிதழ்களைப் பெற்று, அந்தப் பகுதியில் புதியதாக ரோடு பார்ம் செய்வதற்கு, ஃபில்லிங் செய்வதற்கு, அரசினுடைய திட்டங்கள்-இப்போது ஹவுசிங் போர்டு கட்டுகிறார்கள் என்றால், 'லோ லையிங் ஏரியா'-வாக இருக்கிறது என்றால், அதிலே ஃபில்லிங் செய்வதற்கு குளங்களில் மண் அடித்த குளங்களில் எல்லாம் அந்த மண் தேவையில்லை. அந்தக் குளத்திற்கு பாதிப்பு இல்லை என்று சொல்கிறபோது, அதற்கு உடனடியாக அனுமதி அளித்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களும், நம்முடைய பொதுப்பணித்துறை அதிகாரிகளும்

1995 ஏப்ரல் 26]

அதற்கான அனுமதியை வழங்குகிறார்கள். அந்த அடிப்படையில் தான் அந்தக் குளங்களில் மண் எடுப்பதற்கு அனுமதிக்கப்படுகிறது. ஆகவே, முழுமையாக தனியாரிடத்தில் குளங்களைப் பராமரிப்புக்கு விடுவதற்கு உத்தேசம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *449*, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

449—

மல்லியம்மன் துர்க்கம் மலைக்கு மின் வசதி

**21798—திருமதி அ.தி. சரஸ்வதி:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் தொகுதி, மல்லியம்மன் துர்க்கம் மலைக்கு மின் வசதி ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்தியமங்கலம் தொகுதி, கடம்பூர் மலையில் உள்ள மல்லியம்மன் துர்க்கம் பகுதிக்கு புதிய மின்பாதை அமைக்க, மின் பாதைக்கான வழிச் சுற்றாய்வு செய்து வனத் துறையினரிடமிருந்து அனுமதி பெற வேண்டி உள்ளது. தற்பொழுது இங்கு சந்தனமரக் கடத்தல் கும்பல் நடமாட்டம் பிரச்சினை இருந்த காரணத்தால் காவல் துறையினரால் இப்பகுதிக்கு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, காவல் துறை விதித்துள்ள தடை நீக்கம் செய்யப்பட்ட பிறகே, மின் பாதை அமைப்பதற்கான சுற்றாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி அ.தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழரை கோடி தமிழக மக்களின் இதயத்திலும், ஒன்றரை கோடி கழகத்தின் உடன்பிறப்புகள் இதயத்திலும் இடம் பெற்று தமிழகத்தின் ஒப்பற்ற ஆட்சியை நடத்தி வரும் நம்முடைய புது உலகம் படைத்து, பூபாள இராகம் இசைத்திடும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில் திறமையுடன் துறையை வழிநடத்திச் செல்லும் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு